2004 ஜூலை 31]

உயர்த்த வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். வருகின்ற நிதியாண்டிலே நிதிநிலைக்கேற்ப உங்களுடைய செல்லம்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்படும். அது மட்டுமல்லாமல், அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்காக அங்கு இருக்கக்கூடிய பொது மக்கள் எல்லாம் நிலங்கள் கொடுத்து, பணமும் கட்டி, தயார் நிலையிலே இருக்கிறார்கள் என்று நீங்கள் கூறியிருக்கிறீர்கள். தமிழகத்திலே இருக்கக்கூடிய 1,413 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களிலே, மத்திய அரசினுடைய இலக்குப்படி பார்த்தால் 1,176தான் இருக்கவேண்டும். மக்கள் தொகையைக் கணக்கெடுத்துக் கொண்டால், 30,000 மக்கள் தொகையும், மலைவாழ்ப் பிரதேசத்தை எடுத்துக் கொண்டால் 20,000 மக்கள் தொகையும் என்று ஒரு கணக்கு இருக்கிறது. இருந்தபோதிலும், இது சம்பந்தமாக, இங்கே இருக்கக்கூடிய பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கையின்படி, இன்றையதினம் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதன் அடிப்படையிலே, அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை வருகின்ற ஆண்டிலே புதியதாக அமைப்பது குறித்து மாண்புமிகு அம்மாவினுடைய ஆலோசனையைப் பெற்று, அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 108, திரு. கே. ஆறுமுகம், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

108—

பார்வையற்றோருக்கு மின்னணு கைத்தடிகள்

***41956—திரு. கே. ஆறுமுகம்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராஜஸ்தான் மாநிலத்தைப்போல பார்வையற்றவர்களுக்கு மின்னணு கைத்தடிகள் வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை. திரு. எம்.ஏ. ஹக்கீம்.

TRUTH ALONE TRIUMPHS

(மாண்புமிகு உறுப்பினர் தம் இருக்கையில் ஏதோ தேடிக்கொண்டிருந்தார்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: என்ன செய்கிறீர்கள்?

திரு. எம்.ஏ. ஹக்கீம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த switch button-கள் மேலே இவ்வளவு புத்தகங்களை வைத்திருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: முதலிலேயே நீங்கள் எடுத்து வைத்துக்கொள்ள வேண்டியதுதானே?

திரு. எம்.ஏ. ஹக்கீம்: முதலிலேயே எடுத்து வைத்துக் கொண்டிருக்க வேண்டும். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டில் அரசியல் பார்வையற்றோர்கள் அதிகமாகிக் கொண்டே வருகின்ற காரணத்தினால் காலியிடங்கள் பெருத்துக் கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டு நான் பணிவோடு இந்தக் கேள்வியைக் கேட்டு, அமைச்சர் வாயிலாக நான் பதிலைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அரசியல் பார்வையற்றோர் அதிகமாகி வருகின்ற காரணத்தால் அறிவுக் கண்ணாடி வழங்குவதற்கு நம்முடைய மாண்புமிகு அம்மாவின் அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அமைச்சரிடத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அவருடைய பார்வையைக் குறைப்பதற்காக, பார்வையில்லாதவர் என்பதை நாட்டு மக்களுக்குத் தெரிவிப்பதற்காகவே கருப்புக் கண்ணாடியைப் போட்டு அவர் மறைத்துக் கொண்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அவருக்கு அறிவுக் கண்ணாடியா அல்லது பார்வையற்றோருக்கான கண்ணாடியா என்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்தான் தங்கள் வாயிலாக விளக்கம் தெரிவிக்கவேண்டும்.

திரு. எம்.ஏ. ஹக்கீம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அமைச்சரிடத்திலே பதில் கேட்க, அவர் என்னிடத்திலே பதிலைக் கேட்டிருக்கிறார். மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு, பேரவைத் துணைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன், அது

2004 ஜூலை 31]

பார்வையற்றோர் என்பதை வெளிப்படுத்துவதற்கு முடியாதபடி பாதியை மறைத்துக்கொள்வதற்கும், கருப்புக் கண்ணாடியின் வழியாகவே இந்த நாட்டை அவர் பார்த்துக் கொண்டிருக்கின்ற காரணத்தால், உண்மைகளைத் தெரிந்துகொள்ள முடியாமல் அவர் தவித்து, திணறிக் கொண்டிருப்பதற்கும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அதே நேரத்தில் உண்மைகளைத் தெரிவிக்கக்கூடிய ஒரு புரட்சிகரமான அரசாங்கம் புரட்சித் தலைவி அவர்களுடைய தலைமையில் நடக்கிறபோது, அதைக் கண்டுகொள்ளக் கூடாது என்பதற்காகவே, அந்தக் கண்ணாடிக்குள்ளேயும் இன்னொரு கருப்புக் கண்ணாடியையும் இணைத்து வைத்து, அவர் தன்னுடைய வாழ்க்கையை மறைத்துக் கொண்டிருக்கின்ற காரணத்தாலே, நாட்டின் உண்மைகள் தெரிவதில்லை. ஆனால், அந்த உண்மைகளை எதிர்காலத்தில் தமிழக மக்கள் தெரிவிக்கிற விதத்தில், அரசின் நடவடிக்கைகளை ஏற்றுக்கொண்ட மக்களாக, 2006-ல் புரட்சிகரமாக தங்களுடைய அதிரடித் தீர்ப்பை இந்த நாட்டு மக்கள் வழங்குவார்கள். அப்போது அந்தக் கண்ணாடிகளுக்கு உண்மை புரியும். நான் கேட்க விரும்புவது, குறைந்தபட்சம் கருத்துக் கண்ணாடி; கருப்புக் கண்ணாடியல்ல, அறிவுக் கண் திறப்பதற்கு கருத்துக் கண்ணாடிகள் வழங்குவதற்காகவாவது, காலியாகக் கிடக்கின்ற அந்தப் பெரியோர்களுக்கு, நண்பர்களுக்கு அரசு கண்டிப்பாக உதவி செய்ய முன் வரவேண்டும். அதைச் செய்யுமா என்பதை நான் பணிவோடு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிறவியிலேயே கண் பார்வை இல்லாதவர்களுக்கு வழங்கப்படுவதுதான், அரசின் சார்பிலே இலவசமாகத் தரப்படுவதுதான் கண் கண்ணாடி. ஆனால், இடையிலே கண் தெரியாமல் நடித்துக் கொண்டு, தாங்கள் மக்களை ஏமாற்றுவதற்காகச் செய்யக்கூடிய திருட்டுத்தனமாகப் போட்டுக் கொண்டிருக்கக்கூடிய கண்ணாடிகளுக்கெல்லாம் கருத்துக் கண்ணாடியோ அல்லது அறிவுக் கண்ணாடியோ கொடுத்தால் அதுபோன்ற திருடர்களுக்குப் பயனில்லை என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் *109*, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.